IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 42/2024

Deposition of Witness : PW 2

Name : ஜார்ஜ் (வயது – 54)

Father's Name /W/o : த/பெ சற்குணம்

Calling : –

Address : திருமால்பூர்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 29.04.2026.

## குறுக்கு விசாரணை

நான் சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. என் மனைவி சொல்லிதான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து பூர்வீகமாக யாருக்கு சொந்தமானது என்றால் என் மனைவியின் பாட்டிக்கு ஞானமணி என்பவருக்கு சொந்தமானது. வழக்கு சொத்து தற்போது என் மாமியார் பெயரில் தான் உள்ளது என்றால் இல்லை. என் மாமியார் வாதி மற்றும் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தை எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கும் இந்த வழக்கு சொத்தில் சம பங்கு உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி என் மனைவியிடம் சொத்தை பிரித்து கொடுக்க கேட்கும்போது என் மனைவி மறுத்துவிட்டார் என்றால் சரியல்ல. சர்வேயர் வைத்து அளந்து கொடுக்க சொன்னோம். பாகம் பிரித்து தர மறுத்ததால் என் மனைவி காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் என் மனைவி புகார் அளிக்கவில்லை என் மாமியார் தான் புகார் அளித்தார். பிரதிவாதி பாகப்பிரிவினை செய்தவற்கு தயாராக தான் உள்ளார் என்றாலும் என் மனைவிதான் மறுக்கிறார் என்றால் சரியல்ல.